பெயர்,
செயலாளர்,
தமிழ்மொழிக் கழகம்,
லா சால் தேசிய இடைநிலைப்பள்ளி,
46000 பெத்தாலிங் ஜெயா,
சிலங்கூர்

---

உரிமையாளர்,
ஸ்ரீனு உணவகம்,
ஜாலான் சன்தேக்,
46000 சிலங்கூர்

18 ஜூலை 2024

மதிப்பிற்குரிய ஐயா,

<u>ஐந்தாம் படிவ மாணவர்களுக்கான பிரியாவிடை நிகழ்ச்சி</u>

வணக்கம். எங்கள் பள்ளியின் தமிழ்மொழிக் கழகம் தங்களின் உணவகத்தில் ஐந்தாம் படிவ மாணவர்களுக்கான பிரியாவிடை நிகழ்ச்சியை நடத்த ஏற்பாடு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். எங்கள் பள்ளியின் தமிழ்மொழிக் கழகத்தின் செயலாளர் என்ற முறையில் இந்நிகழ்ச்சியைத் தங்களின் உணவகத்தில் மேற்கொள்ள அனுமதி கேட்டுத் தங்களுக்கு இக்கடிதத்தை எழுதுகின்றேன்.

2. நாங்கள் இந்த நிகழ்ச்சியை எதிர்வரும் 12 ஆகஸ்ட் 2024 ஆம் நாள் வியாழக்கிழமை மதியம் 12.30க்கு மேல் மேற்கொள்ளவிற்கிறோம். சுமார் 30 மாணவர்களும் 3 ஆசிரியர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வார்கள்.

3. இறுதியாண்டில் பயிலும் எங்கள் பள்ளியின் ஐந்தாம் படிவ மாணவர்களுக்குச் சிறப்பு செய்யும் நோக்கில் இந்த பிரியாவிடை நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளோம். குறிப்பாக இந்திய மாணவர்களுக்கு நிகழ்த்தப்படும் இந்த பிரியாவிடை நிகழ்வை ஒரு இந்திய உணவகத்தில் மேற்கொண்டால் அருமையாக இருக்கும் என்று பள்ளியின் தமிழ்மொழிக் கழகம் எண்ணியது.

4 அதோடு, எங்களில் சைவ உணவு உண்பவர்களும், வாழை இலை உணவு பிரியர்களும் நிறைய பேர் உள்ளதால் உங்களின் உணவகத்தைப் பிரியாவிடை நிகழ்ச்சி நடத்தும் இடமாகத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். மேலும், உங்கள் உணவகம் பள்ளிக்கு அருகில் இருப்பதால் மாணவர்களுக்குப் போக்குவரத்துச் சிக்கல் இருக்காது. தொடர்ந்து, உங்கள் கடையில் விற்பனையாகும் பாரம்பரிய பலகார வகைகள் நிறைய மாணவர்களின் விருப்ப உணவாகவும் கருதப்படுகிறது.

5. தாங்கள் பெருமனத்தோடு எங்களுடைய இந்த பிரியாவிடை நிகழ்ச்சியை உங்களின் உணவகத்தில் நிகழ்த்த அனுமதிப்பீர்கள் எனப் பெரிதும் நம்புகிறோம். நிகழ்ச்சி நடைப்பெற இரு வாரம் இருக்கும் வேளையில் உணவு வகைகள், பானங்கள் போன்ற விவரங்களை நிகழ்ச்சி நிரல் உறுதி செய்யப்பட்டப் பின்னர்

LIVEWORKSHEETS

தெரிவிக்கிறோம். எங்கள் விண்ணபத்தை ஏற்று விரைவில் பதில் தருவீர்கள் என்று பெரிதும் எதிர்பார்க்கிறோம். தங்களின் மேலான ஒத்துழைப்பிற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி,
இக்கண் பணிவன்புள்ள,

-------------------------------------------
(பெயர்)
(கழக பதவி)
(தமிழ்மொழிக் கழகம்)
(பள்ளிப் பெயர்)

LIVEWORKSHEETS